**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF II ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 10751 of 2010

Deposition of witness for

PW2

Name : R. Prabhakar

Father's Name : S/o. Late Radhakrishnan

Age : Years

Address : No. 57/7, Gandhiji 3rd Street, Kakkanji Nagar, Chennai-39.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of March 2026 .

---

12.03.2026

சாட்சி சத்யபிரமாணம் செய்யப்பட்டார்

PW2 குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் வாதிக்கு சகலபாடி என்று சொன்னால் சரிதான் எனக்கு சாட்சியம் அளிப்பதற்காக இந்த நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி அழைத்தன் பேரிலே நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வாதி தரப்பு சான்றாவணம் 18 ஏற்பட்ட பொழுது அங்கு அனைவருமே இருந்தார்கள் அங்கு நடந்த நடவடிக்கைகளை பார்வையிட்டு தான் நான் கையொப்பமிட்டேன். வாதி இந்த வழக்கை இடத்திற்காக தாக்கல் செய்திருக்கின்றார். 10.8.2006 க்கு பிறகு அடமான பத்திரம் பிரதிவாதிவாதி எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது ஆனால் பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்ததும் ஒப்பந்தம் எழுதிக் கொடுத்ததும் தனக்குத் தெரியும் என்று சாட்சி கூறுகின்றார். வாதி இந்த வழக்கில் என்ன சாட்சியம் அளித்திருக்கின்றார் என்ற

விவரம் எனக்கு தெரியாது. வாதி அவரை விசாரித்த பொழுது வெத்து பத்திரத்திலேயே கையெழுத்து வாங்கி இருப்பதாக சாட்சியம் அளித்திருக்கின்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வெத்து பாத்திரத்தில் நாங்கள் யாரும் கையெழுத்து போடவில்லை என்று சாட்சி கூறுகின்றார். இந்த வழக்கு 2010 ஆம் வருடத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். 2010 லிருந்து 2026 வரை நான் சாட்சியாக இருந்திருந்தால் என்னை அப்பொழுது விசாரித்து இருக்கலாம் என்றால் என்னை எப்பொழுது அழைத்தார்களோ அப்போதுதான் சாட்சியம் அளிக்க முடியும் என்று சாட்சி கூறுகின்றார். வா.சா.18 ல் என்னுடைய சகலபாடிக்கு உதவி செய்ய வேண்டும் என்பதற்காகவே நான் கையெழுத்து போட்டதாக சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் அது சரி அல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியம் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டிய ஒன்று என்று சொன்னால் அதுவும் சரியல்ல.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

Sd/-K.Geetharani, M.A.,M.L.,

Dt. 12.03.2026. III Addl. District Judge.

***II Addl District Court (FAC)***
***City Civil Court, Chennai.***